DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.178/2021**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஆறுமுகம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்/ பணி : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2025.
1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரிக்காக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2017 ம் தேதி மாயனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, மணல் திருட்டு தடுக்கும் பொருட்டு காவல் ஆய்வாளருடன் நானும், உதவி ஆய்வாளர் திரு.முகமது ஜாபர், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கதிரேசன், மு.நி.கா.1417 ஆகியோர்களுடன் ரோந்து அலுவலாக புறப்பட்டு, பிச்சம்பட்டி, கோவகுளம், கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் ரோந்து செய்த போது, ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி லாரியில் திருட்டு மணல் கொண்டுவருவதாக மாயனூர் இரயில்வே கேட் அருகில் இரவு சுமார் 2.00 மணியளவில் சென்று கண்காணித்தோம்.

2. மேற்படி தகவலின் படி, அவ்வழியாக வந்த TN 28 AB 5605, TN 29 AM 4708 என்ற லாரியில் திருட்டு மணல் கொண்டுவந்தவர்களை போலீஸ் பார்ட்டியுடன் சுற்றி வளைத்து, பிடித்து நிறுத்தியபோது, TN 29 AM 4708 என்ற வண்டியின் ஓட்டுநர் வாகனத்தை நிறுத்திவிட்டு, தப்பி ஓடிவிட்டார். அந்த வண்டியில் உட்கார்ந்திருந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தபோது, தனது பெயர் வையாபுரி, சீலைப்பிள்ளையார்புதூர் என்று சொன்னார். லாரியின் ஓட்டுநர் ஓடிவிட்டார். அவரது பெயர் சுசீந்திரன், திருவையாறு, தஞ்சாவூர் என ஆஜர் எதிரி சொன்னார்.

3. இன்னொரு லாரியின் பதிவெண் TN 28 AB 5605 ஆகும். அந்த லாரியின் ஓட்டுநரும் சீலைப்பிள்ளையார்புதூரை சேர்ந்தவர். அந்த ஓட்டுநரின் பெயர் சரியாக நியாபகமில்லை. ஆய்வாளர் இருவரையும் விசாரித்த போது, இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். காவல் ஆய்வாளர் காரணம் கூறி அதிகாலை 3.30 மணியளவில் எதிரிகளை கைது செய்தார். பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் காலை 7.00 மணிக்கு நிலையம் வந்து, எதிரிகளை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து, எதிரிகள் மீது நிலைய குற்ற எண்.347/2017 ச.பி. 379 இதச உ/இ 21(1) MMDR Act 1957 ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 , 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எந்த வாகனத்தில் சென்றோம் என வாகனத்தின் பதிவெண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரி வாகனத்தில் மணல் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில், அது சம்பந்தமாக வருவாய் துறையினருக்கோ, ஆற்று பாதுகாப்பு துறையினருக்கோ தகவல் கொடுத்தோமா என்றால் எனக்கு தெரியாது. ஆய்வாளருக்கு தான் தெரியும். எங்கிருந்து மணல் ஏற்றி வந்தார்கள் என தெரியுமா என்றால் ஆய்வாளர் தான் விசாரித்தார். இந்த வழக்கு சம்பந்தமாக யாராவது புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. சோதனை செய்ததாக சொல்லப்படும் இடம் கரூர்–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இரயில்வே கேட்டின் வடபுறம் என்றால் சரிதான்.

2. சோதனை செய்த போது எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் நியாபகமில்லை. நான் சொல்வது போல் சோதனை எதுவும் செய்யவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து வாகனங்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் புள்ளிவிவர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.